பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
29 12 2024 **SUNDAY** 7 15 **AM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது

2. விண்வெளி தொழில்நுட்பத்தில் இஸ்ரோ குறிப்பிடத்தக்க சாதனையை படைக்கவுள்ளதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

3. புத்தாண்டு கொண்டாட்டங்களை ஒட்டி, தில்லியில் வாகன நெரிசலை சமாளிக்கும் வகையில் போக்குவரத்து கட்டுப்பாட்டு விதிகளை தில்லி காவல்துறை வெளியிட்டுள்ளது.

4. கடும் பனிப்பொழிவு காரணமாக ஸ்ரீநகர் - ஜம்மு தேசிய நெடுஞ்சாலை மூடப்பட்டுள்ளது.

5. உலக ரேபிட் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் குனேரி ஹம்பி பட்டம் வென்றார்.

<<<<<<<>>>>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<<>>>>>>>

விண்வெளி தொழில்நுட்பத்தில் இஸ்ரோ குறிப்பிடத்தக்க சாதனையை படைக்கவுள்ளதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விண்வெளியில் உள்ள இரண்டு செயற்கை கோள்களை இணைக்கும் வகையில், மேற்கொள்ளப்பட்டு வரும் **Spadex** செயற்கைக்கோள் நாளை விண்ணில் செலுத்தப்படவுள்ளதாக தெரிவித்தார்.

இத்திட்டத்தின் வெற்றி நாட்டின் எதிர்கால விண்வெளி திட்டங்களுக்கு பயனளிக்கும் என்று திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

<<<<<<<>>>>>>>

விவசாயம், மின்உற்பத்தி, தொழில் மற்றும் சேவை துறைகளில் சூரிய மின்சக்தியை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மஹாராஷ்டிர மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர ஃபட்னவிஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற அம்மாநில மின்வாரிய இயக்குநர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர், சூரிய மின்சக்தி திட்டங்களை விரைவுபடுத்துவதுடன், தரத்தை பராமரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

தில்லியில் மகளிர் நிதியுதவி திட்டத்திற்காக, அரசு அல்லாத நிறுவனங்களால் சேகரிக்கப்படும் தனிநபர் விவரங்கள் தொடர்பான புகார்களை விசாரிக்குமாறு காவல் ஆணையருக்கு அம்மாநில துணைநிலை ஆளுநர் திரு. வினெய் குமார் உத்தரவிட்டுள்ளார்.

அரசின் நலத்திட்டங்களில் போலியான முகாம்கள் மூலம் தனிநபர்களின் விவரங்கள் சேகரிக்கப்படுவதாக வந்த புகார்களை அடுத்து, அவர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது, உயிரிழந்த குடும்பங்களுக்கு திருத்தியமைக்கப்பட்ட கருணைத் தொகையை வழங்க ஹரியானா மாநில அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதன்படி, உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் கருணைத்தொகை 50 ஆயிரம் ரூபாயிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் உயர்த்தி வழங்கப்படும்.

அம்மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதிய பணிக்கொடை தொகையை 25 சதவீதம் அதிகரித்து, 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாயாக வழங்குவதற்கும் அம்மாநில அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

<<<<<<<>>>>>>>

பல்கலைக் கழக மாணவர்களுக்கான பாதுகாப்பு சூழலை மேம்படுத்த வேண்டும் என்று அண்ணா பல்கலைக் கழக நிர்வாகத்திற்கு, தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், மாணவ மாணவிகளின் பாதுகாப்பு மற்றும் நலனே பிரதானமானது என்று தெரிவித்துள்ளது.

மாணவ மாணவிகளிடையே கலந்துரையாடிய அவர், பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள பாதுகாப்பு குறைபாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

முன்னதாக, பல்கலைக் கழக வளாகத்தின் பாதுகாப்பு சூழல் குறித்து ஆய்வு மேற்கொண்ட ஆளுநர், அப்பல்கலைக் கழக பதிவாளர் மற்றும் மூத்த பேராசிரியர்களை சந்தித்து, பாதுகாப்பு அம்சங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

<<<<<<<>>>>>>>

சென்னை அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் விவகாரம் தொடர்பாக, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவை சந்தித்து பேசவுள்ளதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விவகாரம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் அளித்த உத்தரவை வரவேற்பதாக குறிப்பிட்டார்.

தேசிய மகளிர் ஆணையத்தின் விசாரணை மூலம், உண்மை குற்றவாளி தொடர்பான தகவல்கள் வெளிவரும் என்று திரு. அண்ணாமலை கூறினார்.

<<<<<<<>>>>>>>

வடகிழக்கு மாநிலங்களின் பல்வேறு பகுதிகளில் கடும் குளிர் நிலவும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வானிலை ஆய்வு மையத்தின் மூத்த விஞ்ஞானி திரு. ஆர்.கே. ஜனமணி ஆகாஷவாணிக்கு அளித்த பேட்டியில், தில்லி உள்ளிட்ட வடமாநிலங்களுக்கு கடும் பனிப்பொழிவுக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

உத்தரபிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசம் மற்றும் மஹாராஷ்ட்ர மாநிலத்தின் உள்மாவட்டங்களில் இடியுடன் கூடிய கனமழையும், ஒரு சில இடங்களில் பனிப்பொழிவும் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாட்டின் வடமேற்கு பகுதிகளில் அடுத்த 2 நாட்களுக்கு குறைந்தபட்ச வெப்பநிலை 3 முதல் 5 டிகிரி செல்சியஸ்வரை நிலவக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

இந்நிலையில், கடும் பனிப்பொழிவு காரணமாக ஸ்ரீநகர் - ஜம்மு தேசிய நெடுஞ்சாலை மூடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, ராம்பன், உதம்பூர் மற்றும் ஜம்மு பகுதிகளில் ஆயிரக்கணக்கான வாகனங்கள் சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

பனிப்பொழிவு காரணமாக ஏற்படும் உடல் பாதிப்புகளை சமாளிக்கும் வகையில் ஸ்ரீநகரில் 24 மணி நேரமும் செயல்படும் மருத்துவ கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக காஷ்மீர் யூனியன் பிரதேச சுகாதார சேவை இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

ஹிமாச்சலப்பிரதேசத்தில் நிலவும் கடும் பனிப்பொழிவு காரணமாக அம்மாநில மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் மற்றும் மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் பொரும்பாலான இடங்களில் மின்மாற்றிகள் சேதமடைந்ததன் காரணமாக, மின்விநியோகம் தடைபட்டுள்ளது.

லாஹால்பிட்டி மாவட்டத்தில் நான்கு அடி உயரத்திற்கு பனி படர்ந்துள்ளதால், மணாலி போன்ற பிரசித்தி பெற்ற சுற்றுலா தலங்களுக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

முக்கிய சாலைகளில் படர்ந்துள்ள பனியை ராட்சச இயந்திரங்களை கொண்டு அகற்ற அம்மாநில அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

ராஜஸ்தான் மாநிலத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள 17 மாவட்டங்களில் ஒன்பது மாவட்டங்களை உருவாக்குவதற்கான நடைமுறைகளை ரத்து செய்ய அம்மாநில அரசு முடிவு செய்துள்ளது.

பாலி, பனஸ்வாரா, சிக்கார் மாவட்டங்களுக்கான மண்டல அந்தஸ்தும் ரத்து செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முடிவுகள் அம்மாநில அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அம்மாநில சட்டப்பேரவை தேர்தலுக்கு முன்னதாக முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமல் மாவட்டங்கள் மற்றும் மண்டலங்கள் அறிவிக்கப்பட்டதை அடுத்து இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

புத்தாண்டு கொண்டாட்டங்களை ஒட்டி, தில்லியில் வாகன நெரிசலை சமாளிக்கும் வகையில் போக்குவரத்து கட்டுப்பாட்டு விதிகளை தில்லி காவல்துறை வெளியிட்டுள்ளது.

இதன்படி, தில்லியில் இம்மாதம் 31ஆம் தேதி இரவு 8 மணி முதல் இந்த புதிய கட்டுப்பாடுகள் அமலுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டுப்பாடுகள் அனைத்து தனியார் மற்றும் பொதுத்துறை வாகனங்களுக்கும் பொருந்தும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

பிரபல பத்திரிகையாளர் டாக்டர் கிரண் தாக்கூர் உடல் நலக்குறைவு காரணமாக புனேயில் நேற்று காலமானார். அவருக்கு வயது 77.

கடந்த சில நாட்களாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பல்வேறு பத்திரிகைகள் மற்றும் செய்தி நிறுவனங்களில் 30 ஆண்டுகாலம் அவர் பணியாற்றியுள்ளார்.

புனேயில் உள்ள சாவித்ரிபாய் புலே பல்கலைக் கழகத்தில் தகவல் மற்றும் இதழியல் துறை தலைவராகவும் கிரண் தாக்கூர் பணிபுரிந்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

அமெரிக்காவில் டிக்டாக் செயலிக்கு தடை விதிக்கும் முடிவை சிறிது காலத்திற்கு ஒத்தி வைக்குமாறு அந்நாட்டு உச்சநீதிமன்றத்தை புதிய அதிபராக பொறுப்பேற்கவுள்ள திரு. டொனால்டு ட்ரம்ப் கேட்டுக் கொண்டுள்ளார்.

தாம் அதிபராக பொறுப்பேற்றவுடன் இதற்கு அரசியல் ரீதியான தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று அந்நாட்டு உச்சநீதிமன்றத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, இந்த வழக்கு தொடர்பான விசாரணை வரும் ஜனவரி மாதம் 10ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

உலக ரேபிட் செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் குனேரி ஹம்பி பட்டம் வென்றார்.

நியூயார்க்கில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் பிரிவில் எட்டரை புள்ளிகளுடன் அவர் இப்பட்டத்தை கைப்பற்றினார்.

<<<<<<<>>>>>>>

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில், இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் ஜாம்செட்பூர் அணி – கேரள அணியையும், மும்பை அணி – ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியையும் எதிர்கொள்கின்றன.

நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூர் அணி 4-2 என்ற கோல்கணக்கில் சென்னை அணியை வென்றது.

ஹைதராபாத் - ஈஸ்ட் பெங்கால் அணிகளுக்கு இடையேயான மற்றொரு போட்டி, டிராவில் முடிவடைந்தது.

<<<<<<<>>>>>>>

புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில் ஹரியானா – பாட்னா அணியை எதிர்கொள்கிறது.

புனேயில் நடைபெறும் இப்போட்டி, இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

<<<<<<<>>>>>>>

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் தில்லி அணி 4-2 கோல்கணக்கில் **Gonasika** அணியை வென்றது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் ஹைதராபாத் - பெங்கால் அணியையும், சூர்மா அணி – தமிழக அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<<<<>>>>>>>

கிங் கோப்பை சர்வதேச பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷயா சென் தோல்வியடைந்தார்.

<<<<<<<>>>>>>>

வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரர், வீராங்கனைகளுக்கான போட்டியாளர்களின் பெயர்களை ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

இந்த போட்டியாளர் பட்டியலின், மகளிர் பிரிவில் இந்தியாவின் ஸ்ரேயங்கா பாட்டில் இடம்பெற்றுள்ளார்.

<<<<<<<>>>>>>>

இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நான்காம் நாளான இன்று, ஆஸ்திரேலியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் உணவு இடைவேளை வரை 2 விக்கெட் இழப்புக்கு 53 ரன் எடுத்துள்ளது.

மெல்போர்னில் நடைபெற்று வரும் இப்போட்டியில், 9 விக்கெட் இழப்புக்கு 358 ரன் என்ற ஸ்கோருடன் இன்று ஆட்டத்தை தொடர்ந்து ஆடிய இந்தியா 369 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 474.

<<<<<<<**END**>>>>>>>